## <u>சுருக்கம்</u>

சிறு தொழில் – தொழில் வணிகத் துறை – காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் பரிசோதனைக்கூடத்தில் (CETL) பரிசோதிக்கப்படும் மின்பொருட்களுக்கான பரிசோதனைக் கட்டணங்கள் 1.10.2005 முதல் 30.9.2008 வரையிலான மூன்றாண்டுகளுக்கு திருத்தியமைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

## <u>சிறு தொழில் (இ4) துறை</u>

**அரசாணை (நிலை) எண். 69** **நாள்: 11.7.2007**

படிக்க:

(1) அரசாணை (நிலை) எண். 34, சிறு தொழில் துறை, நாள் 16.6.2000.
(2) அரசாணை (நிலை) எண். 24, சிறு தொழில் துறை, நாள் 26.4.2002.
(3) அரசாணை (நிலை) எண். 44, சிறு தொழில் துறை, நாள் 26.9.2002
(4) தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் கடிதங்கள் எண் 54346/EL5/2005 நாள் 3.10.05 மற்றும் 29.5.2006.

---

<u>ஆணை:</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் காக்களூரிலுள்ள மத்திய மின் பொருட்கள் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கும் பல்வேறு மின்பொருட்களின் கட்டண விவரங்களை 1.4.99 முதல் 31.3.2002 வரை திருத்தியமைத்து வசூலிக்கவும், இந்திய தரக்கட்டுப்பாட்டு மையத்தின் (Bureau of Indian Standards) அங்கீகாரம் பெறுவதினால் ஏற்படும் பயன்களை கருத்திற்கொண்டு பல்வேறு மின்பொருட்களின் பரிசோதனைக் கட்டணங்களை 1.4.99 முதல் 31.3.2002 வரை மூன்றாண்டுகளுக்கு உயர்த்தாமல் நிறுத்தி (Freezing) வைத்தும் ஆணை வெளியிடப்பட்டது. ஆனால், இந்திய தரக்கட்டுப்பாட்டு மையம் 1.10.99 முதல் 30.9.2002 வரை பரிசோதனைக் கட்டணங்களை மூன்றாண்டுகளுக்கு உயர்த்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அங்கீகாரம் அளித்ததால் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 1.4.2002 முதல் 30.9.2002 வரை மின் பொருட்களின் பரிசோதனைக் கட்டணங்களை உயர்த்தாமல் நிறுத்தி வைத்து (Freezing) ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கும் பல்வேறு மின்பொருள்களின் பரிசோதனைக் கட்டணங்களை 1.10.2002 முதல் 30.9.2005 வரை மூன்றாண்டுகளுக்கு பார்வை 1 மற்றும் 2ல் திருத்தியமைக்கப்பட்ட எல்லா இனங்களுக்கும் மிதமாக 10 சதவீதம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டது.

**3.** பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில் இந்த பரிசோதனைக்கூடம் மேற்கொள்ளும் பரிசோதனைகளுக்கான கட்டணவிகிதங்களை, **30.9.2005**க்கு பின்னரான காலத்திற்கு மாறுதல் செய்து நிர்ணயம் செய்வது குறித்த செயற்குறிப்பு ஒன்றை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அரசுக்கு அனுப்பியிருந்தார். அவற்றின் விவரம் பின்வருமாறு:-

(i) ஆய்வுக்கு உட்படுத்தப்படும் மாதிரிகள் தொடர்பான இந்திய தரக்கட்டுப்பாட்டுக் கழகத்தின் குறிப்பீடுகள் (Specification) அந்நிறுவனத்தால் திரும்பப் பெறப்பட்டுள்ளதன் பொருட்டு **11** இனங்களும், கடந்த **10** ஆண்டுகளில் மாதிரிகள் ஏதும் ஆய்வுக்குப் பெறப்படவில்லை என்ற காரணத்தால் **3** இனங்களும் ஆக, **14** இனங்களை ஆய்வுக்கட்டணம் வசூலிக்கும் இனங்கள் பற்றி ஏற்கனவே **26.9.02** நாள் வெளியிடப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்.

(ii) ஆய்வுக்கூடத்தில் கூடுதல் ஆய்வு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாலும் கூடுதல் எண்ணிக்கை ஆய்வுகள் மாதிரிகள் மீது நடத்தப்படுவதாலும் வகை C D மற்றும் Eல் குறிப்பிடப்பட்ட **24** இனங்களுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிடக் கூடுதலாக ஆய்வுக் கட்டணத்தை உயர்த்தி ஆணைகள் வெளியிட வேண்டும்.

(iii) நவீன கருவிகள் பயன்படுத்துதல் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக மனிதநேரம் மற்றும் மின்கட்டணத்தில் குறைவு ஏற்படுவதால் ஆய்வுக் கட்டணத்தை ஒரே சீராக வைத்திருக்கும் பொருட்டு வகை A, B, C மற்றும் Dல் அடங்கிய **49** இனங்களுக்கான ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஆய்வுக் கட்டணத்தில் மாற்றம் இன்றி வசூலிக்க வேண்டும்.

(iv) ஏற்கனவே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் மாதிரிகள் தவிர கூடுதலாக புதியதாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் **17** இனங்களுக்கு புதியதாக ஆய்வுக்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதன்படி காலிபரேஷன் கட்டணம் ரூ.**500/–** காலிபரேஷன் ஆய்வறிக்கை கட்டணம் ரூ.**300/–** கூடுதல் ஆய்வு அறிக்கை பெற கட்டணம் ரூ.**150/–** என்ற வீதத்தில், ஆய்வுக்கான புதிய இனங்களுக்கு ஆய்வுக்கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

(v) இவை தவிர, பி.ஐ.எஸ் (Bureau of Indian Standards) மற்றும் இதர உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் ஆய்வுக்கான மாதிரிகள், இந்த ஆய்வுக் கூடத்தில் வசூலிக்க நிர்ணயித்துள்ள ஆய்வுக்கட்டணம் அதிகமாக உள்ளது என்பதால் ஆய்வுக்கட்டணம் குறைவாக உள்ள தனியார் ஆய்வுக் கூடங்களை நாடுகிறார்கள் என்பதாலும் ஆய்வுக் கட்டணத்தை குறைப்பதால் கூடுதலாக ஆய்வுக்கு வரும் மாதிரிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்பதாலும் ஆய்வுக் கட்டணம் குறைவால் ஏற்படும் இழப்பை கூடுதலாக பெறப்படும் மாதிரிகளை ஆய்வு செய்வதால் ஏற்படும் கூடுதல் வருவாயில் இருந்து ஈடுசெய்து கொள்ள

இயலும் என்பதாலும், நவீனப்படுத்துதல் இயந்திரமயமாக்கல் மூலம் ஆய்வுக்கான மனித நேரம் மற்றும் மின்சக்தி தேவை குறைவாகிவிடும் என்பதாலும் சில இனங்களுக்கு ஏற்கனவே நிர்ணயித்த ஆய்வுக் கட்டணத்தை குறைக்க வேண்டும்.

4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் பரிசோதனைக்கூடத்தில் பரிசோதிக்கும் இனங்களில் 1.10.2005 முதல் 30.9.2008 வரையில் உயர்த்திய கட்டண உயர்வுக்கு உட்படும் இனங்கள், மாறுதல் இன்றி கட்டணம் நிர்ணயிக்கப்படும் இனங்கள் மற்றும் புதிய இனங்களுக்கு நிர்ணயம் செய்ய வேண்டிய கட்டண விவரங்கள் ஆய்வுக்கட்டணம் குறைத்து நிர்ணயம் செய்யப்பட வேண்டிய இனங்கள் ஆகியவற்றை இணைப்பில் கண்டுள்ளவாறு வகைப்படுத்தியும், இந்திய தரக்கட்டுப்பாட்டு கழகத்தின் குறிப்பீடுகள் திருப்பப் பெறப்பட்டமை மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் மாதிரிகள் ஏதும் வரப்படாத இனங்கள் என்ற வகையில் 14 இனங்களை கட்டணப் பட்டியலில் இருந்து நீக்கம் செய்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை, நிதித்துறையின் 23.4.2007 நாளிட்ட அசாகு எண். 21223/தொழில்/07 இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செல்வம்
அரசு செயலாளர்

பெறுநர்
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை–5 (இ)
தலைமை கணக்காயர், சென்னை–6 (இ)
தலைமை கணக்காயர், சென்னை–18 (இ)
தலைமை கணக்காயர், சென்னை–35 (இ)
நகல்கள்
நிதி (தொழில் துறை) சென்னை–9
சிறு தொழில் (சிதொபி) துறை, சென்னை–9
சிறு தொழில் (அநமு) துறை, சென்னை–9 (இ)
பொது (நூலகம்) துறை, சென்னை–9 (இ)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்